## பத்மனாபபுரம் வருவாய் கோட்டாட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

### முன்னிலை: திரு. பா. அருண் சத்யா, பி.இ.

மூ.மு. அ3.52/2015 நாள்: 10.2.2015

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கிராம நிர்வாக அலுவலர்கள் - விளவங்கோடு வட்டம் தகுதிகாண் பருவம் முடிந்தமைக்கான விளம்பல் ஆணை – வெளியிடல்.

படிக்கப்பட்டவை : 1. விளவங்கோடு வட்டாட்சியர் கடித எண்: அ5.14363/14 நாள் : 13.12.2014.

2. தொடர்புடைய ஆவணங்கள்.

…..

**ஆணை:**

விளவங்கோடு வட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்ட 4 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு தகுதிகாண் பருவம் நிறைவு செய்ததாக விளம்பல் ஆணைகள் வழங்க கேட்டு மேலே 1-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் விளவங்கோடு வட்டாட்சியர் பிரேரணை அனுப்பியுள்ளார்.

2. மேற்படி பிரேரணையுடன் அனுப்பப்பட்ட தனியர்களின் பணிப்பதிவேடுகள் மற்றும் உரிய அரசாணைகள் பரிசிலிக்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு வட்டத்தில் கிராம நிர்வாக அலுவலர்களாக பணிபுரிந்து வருபவர்களான கீழ்குறிப்பிட்டுள்ள நான்கு நபர்களும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாள் முதல் அரசு பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள் தனியர்களின் பணி ஏற்கனவே கிராம நிர்வாக அலுவலர் நிலையில் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. இவர்கள் தகுதிகாண் பருவகாலத்தில் முடிக்க வேண்டிய உரிய பயிற்சிகள் மற்றும் சிறப்புத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்கள் நால்வர் மீதும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை. இவர்கள் மீது குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தி தண்டனை வழங்கியதாகவும் இல்லை. தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 38(ஆ)(iii) இணைப்பு 10 பிரிவு 7©ன்படி கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பயிற்சிகாலங்கள் தகுதிகாண் பருவத்தில் சேராது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தனியர்களின் ஒரு மாதக்கால

நில அளவை பயிற்சிகாலம் மற்றும் 6 வாரக்கால கிராம நிர்வாகம் பயிற்சிகாலம் ஆகியன தகுதிகாண் பருவகாலத்தில் சேர்க்கப்படவில்லை. தனியர்கள் நால்வரும் மூன்றாண்டுகால பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் பணிக்காலம் மற்றும் சிறப்புத்தேர்வில் தேர்ச்சி ஆகியன முடித்துள்ளனர்.

3. தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகள் பொது விதி 23(அ) 27 மற்றும் 28 ஆகியவற்றின் அடிப்படையிலும் பிற அரசு சட்டத்திட்டங்களின் அடிப்படையிலும் இவர்கள் நால்வரும் தங்களது தகுதிகாண் பருவத்தினை கீழ்கண்டவாறு முடித்துள்ளனர்.

| வ. எ. | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை படுத்திய நாள் | தகுதிகாண் பருவத்தில் தகுதியில்லாகாலம் | | சிறப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற நாள் | தகுதிகாண் பருவம் முடிக்கும் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பயிற்சி காலம் | விடுப்பு காலம் | | |
| 1. | திருமதி. ம. ரோகினி | 25.07.2011 மு.ப. | 25.07.2011 மு.ப. | 04.02.2013 முதல் 05.03.2013 வரை 06.03.2013 முதல் 10.04.2013 வரை 66 நாட்கள் | - | 10.04.2013 | 24.07.2013 பி.ப. |
| 2. | திரு. வி.எஸ். சுனில் குமார் | 13.09.2012 மு.ப | 13.09.2012 மு.ப | 04.02.2013 முதல் 05.03.2013 வரை 06.03.2013 முதல் 10.04.2013 வரை 66 நாட்கள் | - | 10.04.2013 | 12.09.2014 பி.ப. |

4. சென்னை வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண் 51/2004 நாள் 17.12.2004 தமிழ்நாடு அமைச்சுபணிகளில் இடம் பெற்றுள்ள இளநிலை உதவியாளர்களுக்கு தகுதிகாண் பரும் நிறைவு செய்ய வழங்கப்பட்டுள்ள வரையறைகளின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் பொது விதி 23 (அ) 27-ன்படி தனியர்கள் கீழ்வருமாறு அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட

நாளில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ததாக விளம்பி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

| வ.<br>எ. | பெயர் மற்றும் பதவி | பணியில்<br>சேர்ந்த நாள் | பணிவரன்<br>முறை<br>படுத்திய நாள் | தகுதிகாண்<br>பருவம்<br>முடிக்கும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. ம. ரோகினி<br>கிராம நிர்வாக அலுவலர்,<br>அண்டுகோடு | 25.07.2011<br>மு.ப. | 25.07.2011<br>மு.ப. | 24.07.2013<br>பி.ப. |
| 2. | திரு. வி. எஸ். சுனில் குமார்<br>கிராம நிர்வாக அலுவலர்,<br>மாங்கோடு | 13.09.2012<br>மு.ப | 13.09.2012<br>மு.ப | 12.09.2014<br>பி.ப. |

5. தனியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள விளவங்கோடு வட்டாட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

வருவாய் கோட்டாட்சியர்
பத்மனாபபுரம்

பெறுநர்
தனியர்கள்
நகல்: வட்டாட்சியர்
விளவங்கோடு – சம்மந்தப்பட்ட
நபர்களுக்கு சார்பு செய்து திரும்ப அனுப்பிடவேண்டும்.
நகல்: மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்: அ3 இருப்பு கோப்பிற்கு.